
எல்லாம் தேவ
மகிமைக்காக
பாடம் 5 ஆகஸ்ட் 1, 2026


(1 கொரிந்தியர் 10:31)
“ஆகையால் நீங்கள்
புசித்தாலும்,
குடித்தாலும், எதைச்
செய்தாலும்,
எல்லாவற்றையும்
தேவனுடைய
மகிமைக்கென்று
செய்யுங்கள்.”

1 கொரிந்தியர் 7ல் தொடங்கி, கொரிந்தியர்கள் கடிதம் மூலம் தமக்கு அனுப்பியிருந்த கேள்விகள் வரிசைக்கு விடையளிப்பதில் பவுல் தன்னை ஈடுபடுத்திக்கொள்கிறார் (1 கொரி. 7:1மு).

இதன் காரணமாக, 8 முதல் 10 வரையிலான அதிகாரங்கள் முக்கியமாக விக்கிரக ஆராதனையை பற்றி கையாண்டாலும், அந்த குறிப்பிட்ட பாவத்தோடு வெளிப்படையான தொடர்பு ஏதுமில்லாத சில தலைப்புகளையும் பவுல் இடையிடையே குறிப்பிடுகிறார்.

இருப்பினும், ஒவ்வொரு தலைப்பிலும் ஒரு பொதுவான இழையை இணைக்க அவர் முயற்சிக்கிறார்: அதுவே அன்பு மற்றும் பரஸ்பர மரியாதை, இவை திருச்சபையை ஒற்றுமையை நோக்கி வழிநடத்த வேண்டும்.

இந்த கருத்துடன், சபையிலோ தனிப்பட்ட வாழ்க்கையிலோ செய்யப்படும் அனைத்தும் தேவனுடைய மகிமைக்காகவே செய்யப்படவேண்டும் என்பதையும் பவுல் வலியுறுத்துகிறார்.



**1 கொரிந்தியர் 8**

விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட உணவு
(அறிவும் அன்பும்)

**1 கொரிந்தியர் 9**

பவுல் தனது உரிமைகளை துறக்கிறார்
(சுவிஷேசத்தின் உரிமைகள்)

**1 கொரிந்தியர் 10:1-13**

விக்கிரகராதனைக்கு எதிரான எச்சரிக்கை
(கடந்த காலத்திலிருந்து பாடங்கள்)

**1 கொரிந்தியர் 10:14-22**


கர்த்தருடைய பாத்திரமும் பேய்களின் பாத்திரமும்
(விக்கிரகராதனையை விட்டுவிடுங்கள்)

**1 கொரிந்தியர் 10:23-33**

எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்
(சட்டபூர்வமானதையும் சரியானதையும்)



# அறிவும் அன்பும்



## 1 கொரிந்தியர் 8 (விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட உணவு)

"அறிவு இறுமாப்பை உண்டாக்கும், அன்போ பக்திவிருத்தியை உண்டாக்கும்." (1 கொரிந்தியர் 8:1பி)

பவுல் சபையை "வலியவர்கள்" மற்றும் "பலவீனமானவர்கள்" என இரு பிரிவுகளாக பிரிக்கிறார்.

| | | |
|---|---|---|
| 1 கொரிந்தியர் 8:4-7மு | சிலைகள் ஒன்றுமில்லை என்பதை வலிமையுள்ளவர்கள் அறிவார்கள், ஏனெனில், ஒரே ஒரு உண்மையான கடவுள் மட்டுமே இருக்கிறார். | பலவீனமானவர்கள் இன்னும் இந்த புரிதலை பெறவில்லை. |
| 1 கொரிந்தியர்கள் 8:7பி | வலுவான விசுவாசிகள் சிலைகளுக்கு படைக்கப்பட்ட உணவை உண்கிறார்கள். ஏனெனில், சிலைகளால் அந்த உணவை தீட்டுபடுத்தமுடியாது என்பது அவர்களுக்கு தெரியும். | அந்த இறைச்சியை உண்டால் தாங்கள் பாவம் செய்வதாக பலவீனமானவர்கள் நம்புகிறார்கள். |



ஆனால் பலமுள்ளவர்கள் தங்கள் அறிவினாலும் முன்மாதிரியினாலும் பலவீனரை இடறச் செய்யக்கூடும் (1 கொ. 8:10). தன் சகோதரன் மேலுள்ள அன்பினிமித்தம், பலமுள்ளவன் தன்னை அடக்கிக்கொள்ள வேண்டும் (1 கொ. 8:11-13).

அறிவு, வளர்ச்சியில் இருக்கும் "பலவீன" சகோதரனுக்கு இடறலாய் இருக்கக்கூடும்போது, கிறிஸ்தவர்கள் அறிவைவிட அன்பை முதன்மைப்படுத்த வேண்டும்.



# சுவிசேஷத்தின் உரிமைகள்

1 கொரிந்தியர் 9 (பவுல் தன் உரிமைகளை துறக்கிறார்)

"அந்தப்படியே சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாகவேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார்." (1 கொரிந்தியர் 9:14)

பலவீனர்மேலுள்ள அன்பினிமித்தம், பவுல் குறைந்தது மூன்று உரிமைகளை விட்டுவிட்டார்:



* சபையினரால் உணவளிக்கப்படும் உரிமை (1 கொரி. 9:4)
  - மற்ற அப்போஸ்தலர்களைப் போலவே, தான் ஊழியம் செய்யும் சபைகளின் மூலம் ஆதரவு பெறும் தனது அப்போஸ்தல உரிமையை பவுல் விட்டுக் கொடுக்கிறார்.



* தனது மனைவியுடன் செல்வதற்கான உரிமை (1 கொரி. 9:5)
  - அப்போஸ்தலர்களிடையே, தங்கள் மனைவிகளை பராமரிக்கவும் ஊழியத்தில் தங்களுக்கு உதவவும் அவர்களை தங்களுடன் அழைத்து செல்லும் வழக்கம் பொதுவாக இருந்தது. தன் கணவரைப் போலவே, இந்த பெண்ணுக்கும் சபையின் ஆதரவை பெறும் உரிமை உண்டு.



* பொதுவான பராமரிப்பு பணிகளைப் செய்யாதிருப்பதற்கான உரிமை (1 கொரி. 9:6)
  - தனது பார்வையாளர்களைத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள விரும்புவதாக மக்கள் நினைக்காகாமல் இருக்கவும், அவர்களுக்கு தன்னலமற்ற தன்மையை எடுத்துக்காட்டவும் பவுல் தனது சொந்த உழைப்பின் மூலம் வருமானம் ஈட்ட விரும்புகிறார்.

சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்கள் சுவிசேஷத்தினாலே பிழைக்க வேண்டுமென்று இயேசு தெளிவாக்கினாலும், விசுவாசிகளுக்குத் தடையாய் இராதபடிக்குப் பவுலும் பர்னபாவும் இதைத் தாமாய் விட்டுவிட்டார்கள் (1 கொ. 9:12-14; லூக். 10:7).




# கடந்த காலத்திலிருந்து பாடங்கள்

## 1 கொரிந்தியர் 10:1-13 (விக்கிரக ஆராதனைக்கு எதிரான எச்சரிக்கை)

**“ஜனங்கள் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து விளையாட எழுந்திருந்தார்கள் என்று எழுதியிருக்கிறபடி, அவர்களில் சிலர் விக்கிரகாராதனைக்காரர் ஆனது போல நீங்களும் ஆகாதிருங்கள்.” (1 கொரிந்தியர் 10:7)**

ஆவிக்குரிய விதத்தில் புரிந்துகொள்ளப்படும் யாத்திராகமத்தின் அனுபவம் நமது அனுபவத்திற்கு ஒப்பாயிருக்கிறது. சமுத்திரத்தைக் கடந்து சென்றது நமது ஞானஸ்நான உடன்படிக்கைக்கு ஒப்பானது (1 கொரி. 10:1-2). வனாந்தரத்தில் அவர்கள் உண்ட உணவும் பானமும், நாம் இயேசுவின் சரீரத்தையும் இரத்தத்தையும் ஆவிக்குரிய விதத்தில் புசித்துப் பானம்பண்ணும் திருவிருந்தில் பங்குபெறுவதற்கு ஒப்பாயிருக்கிறது (1 கொரி. 10:3-4).






எச்சரிக்கை! தங்கள் அனுபவம் இருந்தும், இஸ்ரவேலர் விக்கிரக ஆராதனை, ஒழுக்கக்கேடு உட்பட கடும் பாவங்களில் விழுந்தார்கள். அப்படிப்பட்டது நமக்கு நேரிடாதிருப்பதாக! (1 கொரிந்தியர் 10:5-10).

ஆகவே, “தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்” என்ற வல்லமையான புத்திமதியுடன் அப்போஸ்தலன் இப்பகுதியை முடிக்கிறார் (1 கொரி. 10:12).







# விக்கிரக ஆராதனையை விட்டுவிடுங்கள்

## 1 கொரிந்தியர் 10:14-22 (கர்த்தருடைய பாத்திரமும் பேய்களின் பாத்திரமும்)

"ஆகையால், எனக்குப் பிரியமானவர்களே, விக்கிரகாராதனைக்கு விலகி ஓடுங்கள்." (1 கொரிந்தியர் 10:14)



விக்கிரகங்களுக்குப் படைத்த உணவைக் கவலையின்றிப் புசிக்கலாம் என்றால், 1 கொரிந்தியர் 10:20-ல் பவுல் ஏன் அதற்கு எதிராய் அறிவுறுத்துவதுபோல் தோன்றுகிறார்?

வீட்டில் குற்ற உணர்வின்றி இறைச்சி புசிப்பது ஒன்று; விக்கிரகங்கள் ஆராதிக்கப்படும் பொது விழாவின்போது புசிப்பது முற்றிலும் வேறொன்று. அப்படிப்பட்ட விழாக்களில் பங்குபெறுவதால், விசுவாசி தன் விசுவாசத்தை விட்டுவிட்டு விக்கிரக ஆராதனையை ஏற்றுக்கொள்கிறான்.

திருவிருந்தில் பங்குபெறுவதால் நாம் கிறிஸ்துவின் சரீரத்தின் (சபையின்) அங்கமாகிறோம்; ஆனால் விக்கிரக சடங்குகளில் பங்குபெறுவதால், பிசாசுகளோடு பங்குள்ளவர்களாகிறோம் (1 கொரி. 10:16-20).

இயேசுவைத் துதித்துத் திருவிருந்தின் பாத்திரத்தில் பானம் பண்ணிக்கொண்டே, அதே சமயத்தில் பிசாசுகளைத் துதிக்கும் பாத்திரத்திலும் நாம் பானம் பண்ண கூடாது (1 கொரி. 10:21).



# சட்டபூர்வமானதையும் சரியானதையும்

## 1 கொரிந்தியர் 10:23-33 (எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்காகச் செய்யுங்கள்)

"ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்." (1 கொரிந்தியர் 10:31)

"எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு உத்தரவுண்டு, ஆனால் எல்லாம் பிரயோஜனமாயிராது" (1 கொரிந்தியர் 10:23).

உறுதியான இரண்டு உதாரணங்கள்:



அந்த இறைச்சிக் கடையில், விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட உணவும், படைக்கபடாத உணவும் விற்கப்பட்டன. அத்தகைய இறைச்சியை உண்பது தவறு என்று கருதுவதாக தோன்றிவிடக்கூடாது என்பதற்காக, விசுவாசி அந்த இறைச்சியின் பின்னணியை பற்றிக் கேட்ககூடாது (1 கொரி. 10:25).

விசுவாசியில்லாத ஒருவர் விசுவாசி ஒருவரை உணவருந்த அழைத்தார். விசுவாசி எதையும் விசாரிக்காமல் உண்டார் (ஏனெனில் அவருக்கு அனைத்தும் அனுமதிப்பட்டதே). ஆனால், அந்த இறைச்சி விக்கிரகத்துக்கு படைக்கப்பட்டது என்று விருந்தளித்தவர் கூறினார். எனவே, விருந்தளித்தவரின் மனசாட்சிக்கு இடறல் உண்டாக்காதிருக்க, அந்த விசுவாசி அந்த இறைச்சியை உண்பது முறையற்றதாக கருதப்பட்டது (1 கொரிந்தியர் 10:27-29).







இந்த அறிவுறுத்தல்களின் அடிப்படைக் கோட்பாடுகளும் இரண்டு: எல்லாவற்றிலும் தேவனைத் துதிப்பது (1 கொரி. 10:31); மற்றவர்களின் பிரயோஜனத்தை நாடுவது (1 கொரி. 10:24, 32).

அதாவது, எல்லாவற்றிற்கும் மேலாய்த் தேவனிடத்திலும், உன்னைப்போல் உன் அயலானிடத்திலும் அன்புகூருவது (ஐசுவரியமுள்ள வாலிபனிடம் இயேசு கேட்டதுபோல).

“தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்” என்று அப்போஸ்தலன் கொரிந்தியரை உறுதியாய்க் கேட்டுக்கொண்டார். அவர்கள் விழித்திருந்து ஜெபிப்பதை அசட்டைசெய்து, பெருமையும் தன்னம்பிக்கையும் உள்ளவர்களானால், கொடிய பாவத்தில் விழுந்து, தேவனுடைய கோபத்தைத் தங்கள்மேல் வரவழைத்துக்கொள்வார்கள். [...]

தங்கள் வார்த்தைகளும் செயல்களும் மற்றவர்கள்மேல் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்று தங்களையே கேட்டுக்கொள்ளும்படியும், தன்னில் எவ்வளவு குற்றமற்றதாயிருந்தாலும் விக்கிரக ஆராதனையை அங்கீகரிப்பதுபோல் தோன்றுகிறதையோ, விசுவாசத்தில் பலவீனமாயிருக்கிறவர்களின் மனச்சாட்சியைப் புண்படுத்துகிறதையோ ஒன்றையும் செய்யாதிருக்கும்படியும் பவுல் தன் சகோதரரை உற்சாகப்படுத்தினார். “நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்.யூதருக்காகிலும், கிரேக்கருக்காகிலும், தேவனுடைய சபைக்காகிலும் இடறலற்றவர்களாயிருங்கள்.”

எலன் ஜி. உவைட் (அப்போஸ்தலருடைய கிரியைகள், பக். 316)